மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) கொத்து வேர்க்கடலை கொடி வேர்க்கடலை ஆகியவற்றின் விளைச்சலை மதிப்பிடுவதற்குத் தகுந்த தேர்வு அட்டவணையொன்றைத் தயாரிப்பதற்காக கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தி லுள்ள எண்ணெய் வித்துக்கள் பிரிவில் விரிவான ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்வி

பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் காங்கிரஸின் ஒரு கட்சி யைச் சேர்ந்த உறுப்பினர்களும் அவையில் இல்லாதது குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இந்த மன்றத்திலே எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறோம். ஆனால் சமீபத்திலே சுதந்தராக் கட்சியிலிருந்து பிரிந்த பார்வர்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் காங்கிரஸின் ஒரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இங்கே இல்லையே. அவர்கள் புதிதாக ஒரு கூட்டணி சேர்ந்திருக்கிறார்களா? அல்லது சபையை பகிஷ்காரம் செய்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை, இது பாயின்ட் ஆப் ஆர்டரா? எதை வேண்டுமானாலும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து பேசக்கூடாது.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ). சென்னைத்துறைமுகத் தொழிலாளர்கள் மீது போலீஸ் தடியடிப் பிரயோகமும் அதையொட்டி தொழிலாளர் வேலை நிறுத்தமும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அதில்—

"சென்னைத் துறைமுகத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததை ஆட்சேபித்துத் துறைமுக அலுவலக வாசலில் அமர்ந்து தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்திக்கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் தேதி போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததையொட்டி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால், ஏற்றுமதி இறக்குமதி பாதிக்கப்பட்டு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட் டுள்ளதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று" கொடுத்திருக்கிறார்கள்.

இது அரசினுடைய அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.